தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.maveerarnaal.ch / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2020

**13 வயதுப்பிரிவு**
(01.01.2007 – 31.12.2008 வரையில் பிறந்தோர்)

## மறப்போமா மாவீரரே!

உரிமைப்போரின் உன்னத தவமியற்றி உங்கள் உயிரையே உவந்தளித்து உறங்குகின்ற எங்கள் காவலரே! மானத் தமிழரின் நெஞ்சுரத்தை மண்காக்கும் உறுதியை உமக்குள்ளே வலுவாக்கி விடுதலைப் பாதையை வீரியமாக்கிச் சென்ற வீரர்களே!

அன்பு செய்ய உறவுகள் இருந்தனர். வாழ்வின் தேடல்கள் வரிசையாய் இருந்தன. எத்தனை கனவுகள்! இளவயதுக் கற்பனைகள்! தமிழர்களின் சுதந்திர வாழ்வே இவை அனைத்திலும் உயர்ந்தது என்பதால் சிறகடிக்கும் பருவத்தில் அனைத்தையும் துச்சமெனத் துறந்தீர்கள்! தாயக விடுதலையை நெஞ்சங்களில் சுமந்து துணிவைத் துணையாக்கி உறுதியின் உறைவிடமானீர்கள்! தமிழர்களின் தொன்மையான தாய்நிலத்தையும், அங்கு வேரோடி விழுதெறிந்து நின்ற எம் இனத்தையும் மீட்கத் தலைவர் மாமாவின் வழிகாட்டலை ஏற்றீர்கள்! அவர் வளர்த்தெடுத்த தமிழீழச் சிற்பிகள் நீங்கள்!

தாயக நிலமெங்கும் உங்கள் காலடிச்சுவடுகள் பதியத் தரைப்படை அணியாகி மண்ணை முத்தமிட்ட எங்கள் சொத்துகளே! படகேறித் தமிழீழக் கடலெங்கும் வலம் வந்து பகைவரைக் கடலிலே மூழ்கடித்துப் பரணிசெய்த கடற்புலி மாவீரரே! ஈகத்திற்கே இலக்கணம் தந்து இன்னுயிரைக் காற்றிலூதி யாரும் செய்தற்கரிய சாதனைகளை வரித்துவிட்ட எங்கள் தற்கொடை இமயங்களே! வீரியம் மிக்க எங்கள் விடுதலைப் பாதையின் தடைகளைத் தகர்த்தெறிய நேரங்குறித்து உடலிலே வெடி சுமந்து பகையெரித்த தீரரே! கரும்புலிக்காவியரே!

வானேறி வலம் வந்த வான்புலிச் செம்மல்களே! எதிரிகள் அச்சத்தில் உறைய இடியென அவர் குகைமீது இறங்கினீர்களே! தமிழீழ விடுதலைப் போராட்டம் வான்படையையும் கொண்டிருந்த இறுமாப்பை உலகுக்கு அறிவித்த மகுடங்கள் நீங்கள்! தமிழீழத் திருநாட்டின் எல்லைகளைக் காவல் செய்து கண்ணுறங்கும் எல்லைப்படை மாவீரரே! போர்ச்சேனை களத்தில் முனைப்புடன் போரிட அவருக்குத் துணையெனக் களங்கண்ட துணைப்படை மாவீரரே! புலிப்படை போரிடப் பின்களப் பணிபுரிந்த போருதவிப்படை மாவீரரே! பசித்திருந்து தம் வயிற்றில் ஈகத்தீ வளர்த்து அறப்போரின் இலக்கணத்தை உலகுக்குச் சொல்லி விடுதலைக்காய் உயிர்கொடுத்த உன்னதங்களே!

மெய்சிலிர்க்க வைக்கும் வீரமும், கண்பனிக்க வைக்கும் ஈகமும், எண்ணிப்பார்க்கவே முடியாத உயிர்க்கொடையும் புரிந்து தமிழ் மக்களின் மனங்களில் குடியிருக்கும் மானமறவர்கள் நீங்கள்! உம்மை எப்படி நாம் மறப்போம்? நாம் விழி மூடித் தூங்கினாலும் உங்கள் கனவுகளே எங்கள் கண்களுக்குள் விரிகின்றன. குருதி மையினால் வரையப்பெற்ற உங்கள் நினைவுகளை எங்கள் இதயச்சுவர்களில் ஆழப்பதித்து வைத்திருக்கிறோம்.

இன்றைய தலைமுறையாகிய நாங்கள் மட்டுமல்ல எங்கள் அடுத்தடுத்த தலைமுறைகளும் உங்கள் நினைவுகளைச் சுமக்கும். உங்கள் கனவை எமதாக்கி, தமிழீழத் தாய்நாட்டை மீட்போம் என உறுதி கொள்கின்றோம்.

நன்றி,
வணக்கம்.